மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) &(இ) இப் பொருள் குறித்து அரசு, தலைமைப் பொறியாளருடன் கலந்து ஆலோசித்து வருகிறது.

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவரவர்களே, என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்கிறேன். தனியார் பள்ளிக்கூடமாக இருந்தாலும் சரி, சர்க்கார் நடத்தும் பள்ளிக்கூடமாக இருந்தாலும் சரி, பொதுப் பணித் துறையில் எஸ்டிமேட் போட்டு அப்ரூவல் வாங்குவதற்குக் கஷ்டமாக இருப்பதால், இதற்காக ஒரு விங் (Wing) ஏற்படுத்திவிட்டால் நல்லது. அதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்வித் துறையில் பல்லாண்டு காலமாக வற்புறுத்தி வருகிறார்கள். கல்வித் துறைக்கே இப்படி ஒரு விங் கொடுத்தால் நல்லது என்று சொன்னோம். ஆனால் அந்தத் துறையின் மேற்பார்வையின் கீழ், அதற்குத் தனி ஏற்பாடுகள் செய்வோம் என்று தலைமைப் பொறியாளர்கள் கூறியிருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே 320 பள்ளிகள் இருக்கின்றன. அவற்றைப் பழுதுபார்க்க, கட்டிடங்களை விஸ்தரிக்க, பல்வேறு பணிகளில் ஈடுபட, அதற்கென்று தனி அலுவலரை நியமித்தால் நல்லது என்று அங்கேயிருக்கிறவர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கல்வித் துறையும் அதை உணர்ந்து வற்புறுத்தி வருகிறது. தலைமைப் பொறியாளருடைய கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. அவருடைய கருத்துரை வந்ததற்குப் பிறகு, அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Inmates of the Fisheries Training Centre at Adayar, Madras

*256 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether the Government are aware of the eveteasing indulged in by the inmates of the Fisheries Training Centre at Adayar, Madras;

(b) whether there were clashes on this account about the 25th March, 1973; and

(c) if so, the action taken thereon?

சென்னை, அடையாறு மீனளப் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவர்கள்

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, அடையாறு மீனளப் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெண்களைக் கேலி செய்து வருவதை அரசு அறியுமா?

(இ) இதன் காரணமாக, 1973 மார்ச் 25 அளவில் மோதல்கள் ஏற்பட்டனவா?

(உ) ஆமெனில், அதையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆத்திரமுற்ற 300 பேருக்கு மேற்பட்ட கூட்டத்தினர் சென்னை மீனளத்துறை உதவி இயக்குநரது (மீனவர் பயிற்சி நிலையம்) அலுவலகக் கட்டிடத்தைத் தாக்குவதாக அவரிடமிருந்து தொலைபேசிச் செய்தி வரப் பெற்றதன் பேரில், சென்னை (வட்டார) மீனளத்துறை துணை இயக்குநர், காவல் துறையுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு, இதில் தலையிட்டு இந்த இடத்திற்கு காவலர் படை ஒன்றை அனுப்பி அமைதியும் பாதுகாப்பும் அளிக்குமாறு கேட்டார். காவலர் உதவியுடன் இயல்பான நிலை திரும்பியது.

Cantonment Areas

* 257 Q.—Thiru L. BALARAMAN (on behalf of Thiru S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) the cantonment areas in the State and their total extent;

(b) whether they have been exempted from State taxation; and

(c) if so, the details thereof.